# பிரான்ஸ் குடியரசுத் தலைவருடன் பிரதமரின் சந்திப்பு

ஜூலை 14, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரான்ஸ் குடியரசுத் தலைவர் திரு இம்மானுவேல் மக்ரோனுடன் நேரடியாகவும், பிரதிநிதிகள் குழு நிலைப் பேச்சுவார்த்தையும் நடத்தினார். இது 14 ஜூலை 2023 அன்று பாரிஸில் உள்ள எலிசி அரண்மனையில் நடைபெற்றது.

பாதுகாப்பு, சிவில் அணுசக்தி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், எரிசக்தி, வர்த்தகம் மற்றும் முதலீடு, விண்வெளி, காலநிலை நடவடிக்கை மற்றும் மக்களுடனான உறவுகள் உள்ளிட்ட இருதரப்பு ஒத்துழைப்பின் பரவலான பகுதிகள் குறித்து இரு தலைவர்களும் விரிவான விவாதங்களை நடத்தினர்.

இந்தியாவின் G20 பிரசிடென்சி, இந்தோ-பசிபிக் மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் விவாதங்கள் நடந்தன.

"ஹொரைசன் 2047: இந்தியா-பிரான்ஸ் வியூகக் கூட்டாண்மையின் எதிர்காலத்தைப் பட்டியலிடுத்தல்" உள்ளிட்ட லட்சிய விளைவு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

2023 செப்டம்பரில் நடைபெறவுள்ள ஜி20 தலைவர்களின் உச்சி மாநாட்டிற்கு புதுதில்லியில் அதிபர் மேக்ரானை வரவேற்பதற்கு ஆவலுடன் காத்திருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

**பாரிஸ்**
**ஜூலை 14, 2023**